**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 31 of 2024

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : குணசேகரன்

Father's Name : நடராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(1-3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தாலுக்கா சின் திலுப்பூ என்ற முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 08.07.2023 ஆம் தேதி மாலை சுமார் 5.30 மணி அளவில் பூராண்டாம் பாளையம் டாஸ்மாக் கடை அருகே நான் நின்று கொண்டிருந்த பொழுது முந்தைய தினம் திருடுபோன இடத்தினை போலீசார் பார்வையிட்டு என் முன்னிலையிலும் கருப்பசாமி என்பவர் முன்னிலையிலும் சம்பவத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் எனது நண்பர் கருப்பசாமி இருவரும் கையொப்பம் செய்தோம் பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் இன்னைக்கு விசாரித்தார்கள்.

**ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் நான் பூராண்டம் பாளையம் மதுபான கடைக்கு என்ன விஷயமாக சென்றேன் என போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மது வாங்குவதற்காக சென்றேன் நான் கையொப்பம் செய்த பார்வை மகசரை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். நான் பூராண்டம் பாளையம் டாஸ்மாக் அருகே கையொப்பம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:01:32 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**